# தீண்டாமை வேண்டாம்




## கவிதைத் தொகுப்பு

RFOJI'S

# தீண்டாமை வேண்டாம்

(கவிதைத் தொகுப்பு)

©

GOVERNMENT OF MADRAS
1958

சென்னை அரசாங்க செய்தித் துறை
வெளியீடு

முதற் பதிப்பு : டிசம்பர் 1958

விலை 10 காசுகள்

# முன்னுரை

ஓடும் உதிரத்தில்—வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும்—சாதி
தெரிவதுண்டோ அப்பா ?"

என்று பாடினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. .கேள்வியாகக் கேட்டு கவிமணி கூறிய கருத்துதான் நெடுங்காலந் தொட்டே தமிழ் மண்ணில் பரவியிருந்த கருத்தாகும். " பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று பாடிய திருவள்ளுவரும், "மேதினியில் சாதி இரண்டொழிய வேறில்லை" என்று அறுதியிட்டுக் கூறிய ஔவையாரும், " யாவரும் ஓர் குலம்—யாவரும் ஓர் நிறை" என்னும் எண்ணம் கொண்டவர்களுக்கெல்லாம் முன்னோடிகளாவர்.

ஆனால், " சாதிகள் இல்லை—குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்" என்னும் கொள்கைக்கு முன்பு எப்போதும் இருந்ததை விட தற்பொழுது தமிழ்நாட்டில் பெருத்த ஆதரவு இருக்கிறது. உத்தமர் காந்தியடிகளின் சொல்லை நன்ருய் உணர்ந்து நடப்பதில் தனக்கீடில்லாத தமிழ்நாடு " தீண்டாமை" என்னும் கொடுமையை அறவே ஒழிக்க அண்ணல் காந்தியடிகள் காட்டிய வழிகளில் பெருமையுடன் முன்னேறுகிறது....

" எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு" என்ருர் மகாகவி பாரதி....அதுபோல் எங்கும் ஓர் இனம் என்பதே பேச்சு.... இந்த உயரிய கருத்தினைத் தாங்கள் பேசும்பொழுது சுட்டிக்

காட்டாத பேச்சாளர்களோ, எழுதும்பொழுது குறிப்பிடாத எழுத்தாளர்களோ, அழகான தமிழில் கவிதையாகப் பாடிக் கொடுக்காத கவிஞர்களோ இல்லையெனலாம்....அத்தகைய கவிஞர்களின் கரங்கள்பட்டு மணக்கும் கருத்துக் கருவூலமே இந்தக் கவிதைத் தொகுப்பு....

தமிழகத்தின் கவிஞர் வரிசையில் பெயர் பெற்ற எழுவர்— திரு. **ச. து. சு. யோகி,** திரு. புத்தனேரி **ரா. சுப்பிரமணியம்,** திரு. **என். எஸ். சிதம்பரம்,** திரு. கவி. **ஆறுமுகனர்,** கவிஞர் திரு. **பாரதி மோஹன்,** புலவர் திரு. **அப்துல் கபூர் சாஹிப்,** திரு. **A. ஆரோக்கியசாமி பிள்ளை** ஆகியோர் பாடிய பாடல்கள் "**தீண்டாமை வேண்டாம்**" என்னும் இக்கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. தமிழ்ப் பெருமக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வண்ணம் இந்நூலை வெளியிட்டுள்ளோம்.

நெறியாளர்,
**சென்னை அரசாங்கச் செய்தித் துறை.**

## பொருளடக்கம்

**திரு. ச. து. சு. யோகியார் :**

1. தீண்டாமை வேண்டாம்
2. அன்பு நெறி
3. பாரதம் வாழ்க

**திரு. புத்தனேரி ரா. சுப்பிரமணியம் :**

1. சமத்துவக் காலம்
2. தீண்டாமை வேண்டாமே
3. பொது நலம் வளர்ப்போம்

**கவி. திரு. ஆறுமுகனர் :**

1. சமரச வாழ்வு
2. தீண்டாமையை ஒழிப்போம்
3. ஒற்றுமை நாட்டிடுவோம்
4. எளியோரைக் காப்போம்
5. ஹரிஜன சேவை

**திரு. என். எஸ். சிதம்பரம் :**

1. சமரசம் மலர்ந்தது
2. சுடர் வாழ்வு
3. கிளியின் பாட்டு
4. கிளிக் கண்ணி
5. புதுமைப் பாதை

**திரு. A. ஆரோக்கியசாமி பிள்ளை :**

1. சொல்லு தம்பி
2. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

**கவிஞர் திரு. பாரதி மோகன் :**

1. சன்மார்க்கம் ஓங்குக

**புலவர் திரு. பி. வி. அப்துல் கபூர் சாஹிப் :**

1. நமது கடன்

# பாரதம் வாழ்க!



(ச. து. சு. யோகியார்)


1. கட்டக் கந்தையுமில்லே—
[கஞ்சிக்கும் கதியில்லே
குட்டிச் சுவர்க்குடிலில்—
[குமைகின்றோம் காணீரோ

2. வேழம் பிடித்து விளையாடும்
[வீரகுலம்
கோழையாக் கோணலாக்
[குழலாகப் போயிற்றே

3. மன்னர்க்குச் சேதிசொலும்
[வள்ளுவராய் வாழ்ந்தோர்
[கள்
சின்னஞ் சிறுமையுற்றுச்
[சீரழிந்து போனோமே

4. வெற்றிப் பறையடித்த
[வெம்போர்ப் பறையர்கள்
[நாம்
சுற்றும் முழத் துணிக்காய்த்
[தொண்டு செயலாயிற்றே

5. பள்ளஞ் சரி செய்து பார்
[வளர்த்த பள்ளர்களெம்
உள்ளமெலாங் கவலைப்
[பள்ளங்க ளாயிற்றே





6. பண்ணிசைத்து வேந்தர்களைப்
[பாராட்டும் பாணர்கள்நாம்
மண்ணிடத்தே புழுவாக மக்கிப்
[போகின்றோமே

7. சக்கையிலாச் சக்கிலியர் சாரமு
[ற்ற வாழ்வெல்லாம்
நொக்கி நொறுக்கியதோர் நொ
[டிப்பாகப் போயிற்றே

8. ஆண்டவற்கு முன்னே
[அருமுரசமறையவர்கள்
தீண்டிஞற் பாவமெனத் தேச
[ழிந்து போனோமே

9. எட்டாத வீரமெலாம் எட்டிப்
[பிடித்தவர்கள்
தொட்டாலும் பாவமெனும்
[சூதாகப் போனோமே

10. சீராம் திருக்குறளாம் தெய்வ
[மறை தந்தவர்யாம்
பாரமையென்னும் பழியாகப்
[போனோமே



11. நந்தனெனத் தெய்வ நடங்கண்ட நல்லோர்கள்
வெந்த புண்ணிற் புழுப் போல வீணுகப் போனேமே

12. மாணுழ்வா னென்னப் பரங்கண்ட பக்தர்கள்
வீணன வாழ்க்கை விழலாகப் போனேமே

13. சத்தியகா மன்னெனவே சத்தியத்தைக் காத்தவர்கள்
வெத்து வெறுவாழ்வின் வெங்கர்களாப் போனேமே

14. இறைச் சாதி நாங்களெல்லாம் எங்களுக்கே
[யடிமைகளாம்
பறைச் சாதி என்றெமையே பழிகூறும் மேலோரே !

15. கண்டாற் கடையன்குகக் கானவனை ராமபிரான்
கொண்டாடிச் சோதரனுய்க் கொண்ட கதையேன்
[மறந்தீர் ?

16. ஆதி மகான் சங்கரனுக் காண்டவனே எம்முருவில்
ஜாதியற்ற நீதி முறை சாற்றியதை ஏன் மறந்தீர் ?

17. மறையியலும் சோமாசி மாமகத்தி லெம்பெருமான்
பறையுருவில் வந்ததுவும், பழிமிகுந்த ஜாதி நெறி

18. கள்ளர் தமை வெகுண்டு கடுஞ்சாபமிட்டதுவும்
அள்ளுசுடர் வேலோனெம் மாரணங்கை வேட்ட
[துவும்

19. உம்முடைய சாத்திரத்தி லுள்ளபடி காணீரோ ?
எம்மை வெறுத்தொதுக்கும் ஈனத் தொழிலேனே ?

20. வேதத்தில் ஜாதியில்லை வேதாந்தத் தேயில்லை
பேதத்திலே நொண்டி வாதத்திலே பயில்வீர் ?

21. நீதியுடை யார்மேலோர் ; நீதியிலார் கீழோராம் !
சாதி யிரண்டென்றே சாற்றினுள் ஒவ்வையம்மன் !

22. காசு படைத்தவரோ கல்விமிக வல்லவரே !
பேசுமுயர் ஜாதிப் பெரியவரே கேளுங்கள்.

23. காந்தி மகான் எம்மையெல்லாம் கடவுட் குழந்தை
[யென்றூர்
சாந்தி முனி வாக்கியத்தைச் சாதிப்பதென்னாளோ ?

24. ஈசனருள் காற்றும் எமை விலக்கி வீசவில்லை
பேசுமவன் மழையும் எமை விலக்கிப் பெய்யவில்லை.

25. வெய்யிலும் திங்களெனும் விண்மகளின் புன்னகை
[யும்
வையத்திலெம் மையுந்தான் வாழ்விக்க வந்தனவே !

26. ஆணவத்தால் மக்கள் செய் அகங்காரச் சட்ட(ம்)
[மட்டும்
வீணில் எமை ஒதுக்கி விவகாரம் செய்கிறதே ?

27. மாட்சி விடுதலையில் மக்களெலாம் மன்னர்களாம்
ஆட்சியிலே யாவருமே யன்புடைய சோதரராம்

28. காலிலே காயமென்றல் காலைவெட்டித் தள்ளுவதா
நூலிலே கண்டபடி நோய் தணிக்க வேண்டாமா ?

29. சமுதாயமா முடலில் சார்ந்த தீண்டாமையெனும்
பிடிவாத மாம்நோயின் பிழையகற்ற வேண்டாவோ?

30. எங்கள் துயர் தீர எல்லோரும் வந்தருள்வீர் ! [வீர் !
எங்களன்பு பெற்றிடுவீர் ! எங்களையே வாழ்த்திடு

31. எல்லோரும் ஓர்குலமாய் எல்லோரும் ஓர்நிரையாய்
எல்லோரும் ஒன்றுவோம் எம்பாரதம் வாழ்க !

# அன்ப நெறி

(ச. து. சு. யோகியார்)

1. ஆண்டா னடிமை என்றதந்தக்
[காலம்—நாட்டில்
யாவருமே நிகரென்ப திந்தக்
[காலம்
தீண்டாமை யென்றகொடு
[விஷப்பாம்பைக்—கொல்லத்
தேசம் வரிந்து நிற்பதிந்தக்
காலம்.

2. ஆதிக் குடிகள் நமை ஆதரித்
[தார்—நமக்கு
ஆவனயாவும் செய்தே முடித்
[தார்
வேதநெறி மறந்தோம் நீதி
[யற்ருேம்—மிக
வேதனை தருஞ் ஜாதி பேதமுற்
[ருேம்.

3. அடை க் கலந் தந்தவரை
[அடிமை செய்தோம்—நமக்கு
அன்பு கொடுத்தவர்க்கே வன்பு
[செய்தோம்
கடைக்குல மென்றவரைக்
[கழித்துவிட்டோம்—மக்கட்
கண்ணியத் தெய்விகத்தை
[ஒழித்து விட்டோம்.

4. பஞ்சம் தனை விரட்டப் பண்ணை வளர்ப்பார்—நாம்
பஞ்சணையில் துயிலப் பொன்னை விளைப்பார்
பஞ்சரென்றவர் மேற்பழி தொடுத்தோம்—தீய
பஞ்சமும் நோயுமவர்க்கே கொடுத்தோம்.

5. வள்ளுவன் செய்தகுறள் மறையென்போம்—ஆனால்
வள்ளுவக் குலத்தை நாம் குறையென்போம்
வள்ளிக் குறத்தியை நாம் தெய்வமென்போம்—ஆனால்
மற்றைக் குறத்திகளை நைவமென்போம்.

6. புலைச்சி மகனை வேதவியாச னெப்போம்—ஆனால்
புலமைக் குடியைத் தியநீச மென்போம்
மலைச்சி பார்வதிதாளைக் கும்பிடுவோம்—ஆனால்
மலையன் வலையர் தம்மை வம்பிடுவோம்.

7. ஹரிஜன மென்று சொன்னார் காந்திமகான்—இந்த
ஆண்டவன் குழந்தைகள் வாழ்ந்திடவே
கரிஜனமென்ற வரைக் கழித்திடுவோம்—அவர்
கரிசனத்துக்குத் தீமைப் பரிசளிப்போம்.

8. கானப் பறவைகளிற் பேதமுண்டோ ?—கொடும்
காட்டு விலங்குகளிற் பேதமுண்டோ ?
மானமனிதர்க்குள்ளே பேதமென்னே—இந்த
வஞ்சகந் தீர்ப்போம் யாரும் வாரும் முன்னே.

9. சமுதாய மாமுடலில் ஒரு பகுதி—மட்டும்
சாம்பினுற் பின்னர்ச் சவுக்கிய மேது ?
அமுதாய நன்னெறியில் தீண்டாமை -என்னும்
ஆணவ நோய் தனக்கே யிடமேது ?

10. அடிமை யெனப் பிறரை ஆட்சிகொண்டோம்— [நம்மை
அடிமை யெனப்பிறரும் ஆட்சி கொண்டார்
அடிமை யகற்றவந்தார் காந்திமகான்—அவர்
அன்பிற் சுதந்திரத்தின் மீட்சி கண்டோம்.

11. தினைவிதைத்தவர் தினை அறுப்பது போல்—கெட்ட
வினைவிதைத்தே மடிமை வினை அறுத்தோம்
இனி விடுதலை பெற்றோம் நலம் விளைப்போம்— [நாட்டில்
எங்கும் சமத்துவமாம் வழி வகுப்போம்.

12. தீண்டாமை என்னும் தீயைப் பொசுக்கிடுவோம்— [கெட்ட
தீராமை பாராமை நசுக்கிடுவோம்
ஆண்டவன் மக்கள் யாருமொன்றாய்க்—கூடி
அன்பு நெறியில் நின்றே வான்படைப்போம்.

# தீண்டாமை வேண்டாம்.

(ச. து. சு. யோகியார்)

மோஹனம்—ஆதி.

பல்லவி

ஆமை—ஆமை—ஆமை—வேண்
டாமை யான தீண் டாமை

அநுபல்லவி

ஆமை குடி புகுந்தவீடு கெடுமாம் தீண்
டாமையைப் போற்கொடிய தீமை வேறொன் றில்லை

சரணம்

ஓரடிப்பத முறை

உயர்ந்தவர் தாழ்ந்தவ ரென் றிடும் பேச்சே
உதவாக்கரை வீண் வாய் வீச்சே
உலகத்திற் கெல்லாம் இதுபெரும் ஏச்சே
உளுத்துப் போன பழம் பொய்யாச்சே
சாதி சமய நெறிச் சாத்திரக் கூட்டம்
வீண் ஆர்ப் பாட்டம்
சண்டை போடும் பல கோத்திரக் கோட்டம்
வெகு திண்டாட்டம்
மேல்ஜாதி யெனிலவர் தலைக்குமேல் கொம்பா ?
கீழ்ஜாதி மானுடரல்லாதவம்பா ?

நிழலவர் மேற்பட மாட்டாதா? அன்பு காட்டாதா?
வெயிலவர் மேலொளி மீட்டாதா? இன்பங் கூட்டாதா?
மழையவர் நிலத்திலே கொட்டாதா? மண் ஒட்டாதா?
மாருதக் காற்றவர்மேல் வீசாதா? சுகம் பூசாதா?
இயற்கையில் பேதங்களேதுமே யில்லை
செயற்கையாய் மனிதன் செய் தீமையின் தொல்லை.
தீண்டாமை யென்பது வஞ்சத்தின் எல்லை
தீவாய் நரகினும் தீயதோர் தொல்லை
தீராமை—வீண்—ஆராமை—இன்பம்
காணாமை—அன்பு—பூணாமை
தீய பொறாமை யல்லாமை யில்லாமை
ஆய கலைகள் கல்லாமை பொல்லாமை
ஆமைகள் யாவினும் தீமையார் ஆமை
தீண்டாமை......
தேசத்தி லிதைப்போ லில்லை வேண்டாமை
வருவீர்—அன்பு தருவீர்—பணி புரிவீர்—தீண்
டாமை யதையொழிக்க வருவீர்—மக்கள்
யாவரும் சரிநிகர் சமான மான
வாழ்வின் மேன்மை பெறுவீர்.



# சமத்துவக்காலம்


(புத்தனேரி ரா. சுப்பிரமணியம்)

சமத்துவக் காலம் அண்ணே—இது
சமத்துவக் காலம்—
சாதி பேதம் பேசுவது
சட்ட விரோதம் (சமத்து)

துரிதம்

அரிஜனமும் ஆலயத்தில்
சரிசமசாய்க் கூடிநின்று
தரிசனமும் பண்ணலாமே—சாமி
தரிசனமும் பண்ணலாமே—அவர்கள்
வரிசையாகப் பொது விருந்தில்
மனம் பொருந்த வந்திருந்து
அறுசுவையும் உண்ணலாமே—ஆமாம்
அறுசுவையும் உண்ணலாமே! (சமத்து)

ஆரானாலும் ஜாதி பேதம்
பாராமலே பொதுக் கிணற்றில்
தாராளமாய் நீரெடுக்கலாம்—தண்ணீரெடுக்கலம்
[—பொதுச்
சலுகையெல்லாம் அநுபவிக்கலாம்—ஆமாம்



கிட்டே வராதே நீ
கீழ்ஜாதிக் காரனென்னு
கொட்டம் அடிக்க வேண்டாம்—அது
சட்ட விரோதம் என்று
தண்டோராப் போட்டுச் சொல்லும் (சமத்து)

வீட்டுவிலகித் திரியாமல்
வேறு ஜாதிக் காரரோடே
ஒட்டி வாழத் தெரிய வேணும்—மனம்
தொட்டுப் பழகத் தெரிய வேணும்—ஆமாம்
(சமத்து)



# பொதுநலம் வளர்ப்போம்



(புத்தனேரி ரா. சுப்பிரமணியம்)

(எடுப்பு)

மேற்குலம் ஏது?
கீழ்க்குலம் ஏது?
வேண்டாம் வீண் வாது!—இந்த
வெறும்பேச் சுதவாது—இனிமேல்
வெறும்பேச் சுதவாது!

(தொகுப்பு)

நாற்குலம் என்பது சரியானுல்—அது
நாலா யிரமென விரிவானேன்?
சாத்திர சம்மதம் இதுவானுல்—பல
ஜாதிச் சண்டைகள் வருவானேன்?
(மேற்குலம்)

(முடிப்பு)

சீமான்—ஏழை இருஜாதி—இது
தீதென் பார்அர சியல்வாதி;
ஆமாம், ஆண்—பெண் இருஜாதி-இனி
அழியா தென்பது பொதுநீதி (மே)

இட்டார் பெரியோர் ஒருஜாதி—சற்றும்
ஈயாதவர்கள் மறுஜாதி!





பட்டாங்கில் உள்ள நீதியிது!—அவ்வைப்
பாட்டியவள் சொன்ன சேதியிது
(மே)

படித்தவர் கூட்டம் ஒருஜாதி என்றும்
படியாதவர்கள் மறுஜாதி:
படிப்படி யாய்ப்பல வழக்குகளேப்
படைப்பதும் உலகின் வழக்கமடா!
(மே)

வேண்டத் தகாத ஜாதிகளே
விளேந்திட்டாலும் மேதினியில்
தீண்டத் தகாத ஜாதியெனும்
சிறுமை பொறுக்க மாட்டோமே!
(மே)

இனிமேல் ஜாதிப் பிரிவினேயால்
ஏற்றத் தாழ்வே கருதாதீர்!
மனிதர்கள் அனேவரும் ஒருகுலமே!
வளர்த்திட வேண்டும் பொதுநலமே.
(மேற்குலம்)





# புதுப் பாதை



(என். எஸ். சிதம்பரம்)

இராகமாலிகையிற் விருத்தமாகப்பாட.

1. சாதியிலே தாழ்ந்தவராம்
   சமஉரிமை அற்றவராம்
நீதியின்றி அரிசனரை
   நினைத்தபடி பேசிவந்த
தீதிழைத்த காலமெல்லாம்
   தீர்ந்திந்நாள் போனதம்மா !
ஆதிஇறை சந்நிதியில்
   அனைவருமே சமமானர் !


2. உரிமையுற்ற நமதாட்சி
   உவகையுடன் செய்பணி
                [யால்
அரிசனர்கள் மேன்மை
                [பெற்றே
   அனைவருடன் ஒன்றாகிப்
பிரித்துவைத்த தீண்டாமைப்
   பேயாட்டம் அறநீங்கி
மரியாதைக் குணமோங்கி
   மற்றவர்போல் வாழ்
                [வுற்றார் !

3. மதிநிறைந்து கதிமிகுந்து
   மாண்பான கலைவளர்ந்து
நிதிசுரந்து மக்களெல்லாம்
   நீதியுடன் சமமுற்றே
இதமோங்கும் நிலையெய்தி
   இனிதாக இலங்குகின்ற
புதியதொரு உலகமதைப்
   பொற்புடனே கண்டுவிட்
                [டோம் !


4. ஒதுக்கி வைத்த அரிசனரை
   ஒற்றுமையாய்ச் சேர்த்து
                [விட்டோம் !
புதுமைதிகழ் பாதையிலே
   புனிதமுடன் அடிவைத்
                [தோம் !
பொதுநல்ல காந்தியண்ணல்
   புகன்றவழி ஒளிகண்டோம் !
சுதந்திரநம் அரசோங்கச்
   சோம்பலின்றிப் பணிசெய்
                [வோம் !







# கிளிக் கண்ணி




(என். எஸ். சிதம்பரம்)

1. தீண்டத் தகாதென்று
சிறுமையாய் அரிசனரை
ஆண்ட காலமெல்லாம்—
[கிளியே!
அறவே மாறினதே!

2. அருங்கலை கல்விநலம்
அரிசனர் பெற்றுயர்ந்தார்.
திருவுடன் சேரியெல்லாம்
[—கிளியே!
சீரொளி மேவினவே!

3. சரிநிகர் சமத்துவமாய்
சாதியின் பேதமின்றி
அரிசனர் நமதரசில்—
[கிளியே!
அரும்பலன் மிக அடைந்
[தார்!



4. அனைவரும் ஒருஇனமாய்
அன்புறும் ஒருகுலமாய்
நினைத்திடும் புதுவாழ்வு
[தான்—கிளியே!
நிறைமணம் வீசியதே!


5. தாழ்ந்தவர் இல்லை
[யென்றே
தமிழ்இசை முழக்கிடு
[வோம்!
வாழ்வினில் இறையரு
[ளால்—கிளியே!
மன மகிழ் நிலைபெறு
[வோம்!




6. அண்ணலார் காந்தி
[சொன்ன
அறவுரை வழிநின்று
புண்ணியப் புதுஉலகம்—
[கிளியே!
பொலிவுடன் கண்டிடு
[வோம்!









## ஒற்றுமை நாட்டிடுவோம்

கவி. ஆறுமுகனர்

பல்லவி

அன்பு நிறைந்தோங்கும் இந்து தேசத்திலே—பெரும்
துன்ப மடைந்தோம் சாதி வித்தியாசத்திலே (அ)

ஆரண ஞானம் உணர்ந்த விவேகிகள்
பாரத வீரரெனும் பெருந்தியாகிகள்—
தேசத்திலே (அ)

அருமறை தெள்ளு தமிழில்
[அளித்த

திருநிறை வள்ளுவரைப்
பிறப்பித்த—தேசத்திலே
(அ)

அந்த மிகும் ஆரண முணர் விவேகா
னந்தர் தயானந்தர் பொன்னுரை விளங்கும்—
[தேசத்திலே (அ)

அட்சர லட்சமெனப் புகழேந்திய
விற்பனமாகவி பாரதி தோன்றிய—தேசத்திலே (அ)


ஆனந்தம் அகச் சாந்தி நிறைந்த
ஞானம் தவ நிறை காந்திபிறந்த—தேசத்திலே (அ)

அனுபல்லவி

இன்னும் நாம் சகோதரரை
ஈனரென்று தள்ளலாமோ ?
நன்னய சகோதரத்வம்
நாட்டிடுவோம்—இன்றே
நாட்டிடுவோம் . . . . . (அ)




# தீண்டாமை வேண்டாமே!



(புத்தனேரி ரா. சுப்பிரமணியம்)

தொகையறு

பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்குமெனும் வள்ளுவன்
குறட்பாவை மறக்கலாமா?
பொறுப்பின்றி யேஜாதி
மதம்பேசிச் சிலருள்ளம்
புண்பட வெறுக்கலாமா?


பாட்டு

தீண்டாமை—இனி
வேண்டாமே!
தேச நலங் கெடுக்கும்
தீராப் பகை கொடுக்கும் (தீண்)

தாரணி தன்னி லுயர் ஜாதி எதுவுமில்லை
தாழ்குலம் என்பதிலே சற்றும்
[பொருத்தமில்லை!
காரண மின்றிக் கூறும் பஞ்சமர் என்ற
[சொல்லைக்
கைவிட வில்லையெனில் களங்கம்
[மறைவதில்லை! (தீண்)

ஒன்றே குலம் என்னும் உண்மை
[உணர்ந்த பின்னும்
ஊருக்கெல்லாம் அதனை உபதேசம்
[செய்த பின்னும்
குன்றவே இல்லை இன்னும் குலவெறி
[என்னும் தொல்லை!
கொஞ்சமேனும் இதனை நெஞ்சம்
[உணர்வதில்லை! (தீண்)





# சுடர் வாழ்வு


(என். எஸ். சிதம்பரம்)

தாளம் : திஸ்ரம்,

அரிசனர்கள் உயர்வுறவே
அரசாங்கம் செய்துவரும்
அரியபல நன்மைகளை
அறிந்திடவே அகமினிக்கும்!

சாதியெனும் வேற்றுமையாம்
தாழ்வகன்றே அரிசனர்கள்
ஓதிநல்ல வாழ்வடைந்தார்
ஓங்குநம தாட்சியிலே !

அரிசனர்வாழ் சேரிகளை
அழகிடமாய்ச் செய்
தவர்க்கே
உரியபல சலுகைகளை
உவந்தளிக்கும் அரசாங்கம் !





தாண்டவம்செய் ஆண்டவனின்
தாள்பணிய அரிசனர்கள்
வேண்டிஅவன் கோயிலுக்குள்
விருப்புடனே சென்றிடலாம் !


அரிசனர்கள் மிகப்படிக்க
அரசாங்கத் தொழில்பார்க்க
பிரியமுடன் அரசாங்கம்
பேதமின்றி உதவிடுதே !

உழவினுக்காய் மாடுகளும்
உழுதொழில்செய் அரிசனர்க்குப்
பழுதின்றி அரசாங்கம்
பயன்பெறவே கொடுத்திடுதே !

திருவோங்கும் நமதாட்சி
தீண்டாமைப் பேயொழித்தே
அருளோங்கும் சுடர் வாழ்வில்
அரிசனரை ஆழ்த்தியதே !

அரிசனரும் சரிசமமாய்
அமர்கின்ற நிலைகொண்டார்
அரியவராம் காந்திமகான்
ஆன்மாவும் சாந்தியுறும் !







# கிளியின் பாட்டு

(என். எஸ். சிதம்பரம்)

(பல்லவி)

பூங்கிளி பாடுதம்மா !—தீண்டாமை
போய்விட்டதென்றே பைந்தமிழ்
[இசையினில் (பூ)


(அநுபல்லவி)

தீங்குரலாலே தேனாய் இனிக்க
தீர்ந்தன சாதித் தீமைகள் என்றே
(பூ)

(சரணங்கள்)

இறைவனின் படைப்பினில் எவரும் சமமே !
இழிந்தவர் அரிசனர் என்றால் அதமே !
குறைதரும் வேற்றுமைக் கொடுநோய் தவிர்ந்தது !
குணமிகும் வாழ்க்கையும் மலர்ந்தது என்றே (பூ)

புதுசமுதாயப் பொற்கதிர் உதித்தது !
புன்மையாம் சாதிப் பூசலும் நசித்தது !
எதிலுமே தாழ்வினை எண்ணிடாததோர்
இணையிலாக் காலமும் வந்தது என்றே (பூ)




# சொல்லு தம்பி!



A. ஆரோக்கியசாமி பிள்ளை

(கட்டபொம்மன், "போகாதே போகாதே"
என்ற மெட்டு)




தீண்டாமை வேண்டாமே
[சின்னத்தம்பி
தேசத்துக்கே இது ஆகாதப்பா
[—தமிழ் தேசத்துக்கே
மாண்டாலும் வாழ்ந்தாலும்
[மாந்தரொன்று
வாழ்விலே நீ ஒன்றாய் வாழு தம்பி.

கண்ணுக்கு முன்னாலே கண்ணைக்
[கட்டி
காணாத கற்பனைப் பேரைச் சூட்டி
முன்னுக்குப் பின்முரண் கூத்தாடும்
மூதேவித் தீண்டாமை வேண்டா
[மப்பா.

பல்லுப் பட்டால் விஷ நோக்காடு
பாம்பைத் தொட்டாலேதுசாக்காடு?
உள்ளும் புறமுமே
[ஒன்றான
ஒற்றுமையில் பேதம்
[வேண்டாந்தம்பி.




தோலிருக்குச் சுளையுள்ளே இல்லை
சொல்லிருக்கு அதில்ஞாயமில்லை
ஆளுக்கு ஆள்தொட்டுப் பூமியிலே
ஆராரு செத்தது சொல்லுதம்பி !











# சமரச வாழ்வு

(கவி. ஆறுமுகனுர்)

(கஜல்)

சாதி இரண்டொழிய
வேறில்லை என்றே

தமிழகத்துப்பாட்டி அவ்வை
சொன்னுள் அன்றே

பேதமதைக் கொள்ளாமல்
அன்பு வாழ்வைப்

பேணி யென்றும் சமத்து
வமாய் வாழ்வோம் நாமே.

(பாட்டு)

சாதிபேதமான குரோதம்—
ஜனநாயகத்தின்

தருமத்திற்கே சட்ட விரோ
தம்—ஐயா (சா)

ஆதியிலே பிறப்பினிலே
தாழ்வுயர்வேது—தமிழ்


அருமறையாம் திருக்குறளை
ஆய்ந்து நீ ஓது

பாதியிலே வந்த மூடப்
பழக்கமிப்போது—நமக்குள்

பகைவளர்த்துச் செய்யும்
கொடுமை பகர
[வொண்ணுது—ஐயா (சா)

மனிதன் தன்னை மனிதன்
தொட்டால் தீட்டு உண்
[டாகும்—என்ற


மடமைதனைச் சொன்னுல்
சிலர்க்கு வருத்தமுண்டா
[கும்



கனி இருக்கக் காய்கள் தின்னும் கீழ்நிலைபோல—
[நேசக்

கரமிருக்கப் பிரிந்து போதல் எதற்கு மண்மேலே?
[ஐயா (சா)

மக்கள் சரி நிகர், சமான வாழ்வு வாழணும்—இந்த
மா, பெரிய நீதியை நாம் உணர்ந்து கொள்ளணும்
தர்க்கம் வீண்குதர்க்க மில்லாச் சமரசம் வேணும்—நமது
தந்தை யான காந்திமகான் சொல்லை கேட்கணும்—
[ஐயா (சா)





# சமரசம் மலர்ந்தது



(என். எஸ். சிதம்பரம்)

பல்லவி


தீந்தமிழ்நாடு செழித்ததுவே !—கொடுந்
தீண்டாமைப் பேய் அகன்றதுவே ! நம்—
(தீ)


அநுபல்லவி

காந்தியின் செந்நெறி வளர்ந்ததுவே !
[மனக்
கருத்தினில் சமரசம் மலர்ந்ததுவே ! உயர்
(தீ)

சரணம்

திடம்பெறும் செந்தமிழ்த் திருநிறை
[ஆட்சியில்
தெள்ளிய பாரதம் திகழ்ந்திடும் மாட்சியில்
படிப்புடன் அரிசனர் பண்பினில் சிறந்தார்
பலதொழில் நலன்களும் பாங்குடன்
[நிறைந்தார் ! (தீ)






## தீண்டாமையை ஒழிப்போம்

(கவி. ஆறுமுகனர்)

தீண்டாமை ஒழிப்போம்
சிறுமை விடுப்போம் மடமை தொலைப்போம்
தினமும் நன்மனமுடன் (தீண்)

வேண்டாம் வைதீகம்
வீண்சாதி மோகம்
மேற்குலத்தவர் கீழ்க்குலத்தவர்
பார்க்குள் உண்டெனும் வாக்கியமற (தீண்)

மதப்பழிப்பும் குல இழிவும் அற
மனத்தில் ஒற்றுமை உணர்ச்சி பொங்கிட
உதிக்கும் சமத்வ ஒளி துலங்கிட
ஓதும்காந்தி மகான் நீதி போதனையில்
உலகத்தவர் நலமுற்றிட
புலையொத்திடும் நிலையற்றிட (தீண்)




# ஹரிஜன சேவை

(கவி. ஆறுமுகனார்)

தீண்டாமை என்னும் கொடு விஷத்தா
[லிந்த
தேசத்திலே தொல்லை—அது
நீண்ட காலமாக கோடிப் பேரைத்
[தீண்டி
நீட்டுதே இன்னும் பல்லை (தீ)


கூடப் பிறந்த நம் சோதரரைத் தள்ளி
குதர்க்கமும் பேசலாமா ?—நாட்டில்
வாட விட்டவரைச் சுதந்திரமாக நாம்
வாழ்வதும் முறையாமா ? (தீ)

சாதி வெறியை அடியோடு சாய்த்துச்
சரி, நிகராய் வாழலாம்—மக்கள்
நீதி, நெறியாக ஒன்று பட்டுப்போனால்
நிச்சயம் முன்னேறலாம் (தீ)

சட்டங்கள் போட்டுச் சமமாக
[வாழ்ந்திட
சர்க்கார் நலம் செய்கிறார்—மேலும்
திட்டம் வகுத்து அரிஜன் முன்னேறவும்
தீவிரம் காட்டுகின்றார் (தீ)

புத்தர், ஏசு, நபி, முகம்மது, சங்கரர்
போதித்த மார்க்கம் ஒன்றே—மக்கள்
இத்தரை மீதினில் ஆண்டவன்
[படைப்பில்
ஏற்றத் தாழ்வில்லை யென்றே (தீ)

அண்ணல் காந்திமகான்
[தீண்டாமையைப் போக்க
அளவற்ற தொண்டு செய்தார்–அரிஜன்
வண்ணமுடன் வாழ்க, எண்ணியபடி
[அவர்
வாழ்வையே அர்ப்பணித்தார் (தீ)




## சன்மார்க்கம் ஓங்குக !

(கவி. பாரதி மோகன்)

"நந்தவனத்திலோர் ஆண்டி"—என்ற இசை

சாதிக் கொடுமைகள் மாய்க—நல்ல
சட்டங்கள் வந்தது சர்க்காரின்
[பணியால்
நீதி எல்லோருக்கும் ஒன்ருய்—என்று
நிச்சயம் செய்தனர் யாவர்க்கும்
பொதுவாய் (சா)

தீண்டாமை வேரோடு சாய்ந்து—
[கொடும்
தீக்கிரை யாகுது வெந்தணல் வீழ்ந்து
ஆண்டவன் தெரிசனம் செய்ய—நமது
அரிஜனம் கோயிலுள் கும்பிடச்
[செய்தார் (சா)

கல்வியும், கைத்தொழில் தந்தார்—அவர்
கை கோத்துப் பொது இடம் போகலா
[மென்ருர்
தொல்லை எல்லாம் நீங்க வைத்தார்—
[நமது
தொன்று தொட்டே அவர் நம்மின
[மென்ருர் (சா)

உத்தமர் காந்திஜி எண்ணம்—சர்க்கார்
உள்ளத்தில் நீங்காமல் வந்தது
[திண்ணம்
நித்தமும் சன்மார்க்கம் ஓங்க—மக்கள்
நீடூழி வாழ்ந்திடப் பணிகளும் செய்
வோம் (சா)



# நமது கடன்


(புலவர் பி. வி. அப்துல் கபூர் சாஹிப்)

(நாட்டுக்குப் பொருத்தம் நாமே நடத்தும் கூட்டுப்பண்ணை விவசாயம்—என்ற மெட்டு)

(தொகையரு)

சாதி இரண்டொழிய வேறில்லை என நீதி
போதித்த ஔவையார் பொன்மொழியைக் காணீரோ
காட்டினில் வேடன் கழுகொடுகுரங்கைக் கனத்த சகோதரா
[என்றே
ராமர் காட்டிய வழிமிக நன்றே
அதை நாம் கருதியே மனிதர்கள் ஒருகுலமென்றே (சாதி)

(பாட்டு)




சாதியின்பேதம் ஒழிந்திட நாமே
[தக்க பணி புரிவோம் தம்பி
தங்கள்சாதி பெரிதெனவே நம்பி
மனிதர் சண்டைகள் செய்து
[சாகிறார் வெம்பி (சாதி)

பேதத்திலுயர்ந்தவர் தாழ்ந்தவர்
கூடிப் பெற்ற பிள்ளையென்ன
[சாதி
உலகில் பிறப்பது இரண்டே சாதி
தீண்டாமைப் பேயை விலக்கியே
வாழ்வது நீதி (சாதி)

புத்தர்முகமது காந்தி
[பாரதியார் போதித்த
[பொன்மொழி நோக்கு
அதைப் போற்றியே
[சாதியை நீக்கு
இந்தியா புகழ்பெறச்
[சமதர்மவழியை
[யுண்டாக்கு (சாதி)



ஆனைமுதலெறும்பு வரைக்
[கும் சாதி ஆண்பெண்ணி
[ரண்டுதானுண்டு
பகுத்தறிவுள்ள நாமதைக்
[கண்டு
சாதியை அகற்றுவதே நமது
[கடனெனக் கொண்டு
(சாதியின் பேதம்)






A. ஆரோக்கியசாமி பிள்ளை

“ மண்ணுக்கு மரம் பாரமா ?” என்ற மெட்டு.

தங்கத்தில் களிம்பேறுமா
சந்திரனில் சூடேறுமா
சிங்கத்தின் செயல்மாறுமா—தீண்டாமை
திட்டு யார்க்கும் ஒட்டுமா.


அம்புவி மாந்தர்கள் அன்னை வயற்றில் குடி
[யிருந்து
ஐந்திரு மாதத்தில் அன்பாக நாம்பிறந்தே
அமுதம் அமுதமென்று ஆவலோடு நாம் உண்டு
ஆனந்த வளர்ச்சியிலே ஆளானோம் புவிதனிலே.




செந்தமிழ்ச் சுவை மாறுமா—தீண்டாமை
தீட்டு யார்க்கும் ஒட்டுமா ? (தங்கத்தில்)

பிறப்பில் ஒரு பிறப்பு பேதமே ஒண்ணுமில்லே
சிறப்புச் செந்தமிழின், தேசம்வந்த சோதரரே !
உள்ளமே மாறுபட்டால் ஞாயமா ?
ஒன்றாய் வாழ்ந்தால் நலம் போகுமா ?

செல்லமாய் சொன்ன சொல்லுநிலைக்குமா ?
தீட்டு, செய்கையில் நியாயங்கூற முடியுமா ?
(தங்கத்தில்)





## எளியோரைக் காப்போம்

(கவி. ஆறுமுகனர்)

நல்ல காலம் பிறந்திடுச்சு
நம்ம நாட்டிலே—ரொம்ப
நலிந்த வாழ்வு மலர்ந்திடுச்சு
இந்த நாளிலே—இனி
எல்லோரும் நாம்
[சமத்துவத்தை
ஏற்போம் வாழ்விலே - ஜாதி
இழிந்ததென்றும்—உயர்ந்த
[தென்றும்
இல்லே நமக்குள்ளே (ந)

மாடு பூனே நாய்களோடும்
கொஞ்சி மகிழ்கின்ருேம்—
[நம்போல்
மக்கள் தம்மைத் தொட்டால்
தீட்டென்றெண்ணி
[இகழ்கின்ருேம்—ஜாதி
பீடையான தீண்டாமை
[யெனும்
பேயை விரட்டுவோம்—குலப்
பேதமின்றி சோதரர்கள்
[போல வாழுவோம் (ந)

உலகம் போற்றும் காந்தியடி
[கள்
ஓதியது போலே—மக்கள்
ஓர் குடும்பம் மாக வாழ
வேண்டும் புவி மேலே
கலகமிட்டு, தாழ்வுயர்வு
பேசுவதாலே—நன்மை



கண்டதென்ன உண்மை நிலையைக்
காண்பீர் இந்நாளே (ந)

கருணை மனத்தால் எளியோர்
தம்மைக் காக்க வேணுமே—அவர்கள்
கவலை தீர நலங்கள் பற்பல
ஆக்க வேணுமே
உரிமை தந்து சரி, நிகர்
சமானமாகவே—நாம்
ஒன்று பட்டால் அனைவருக்கும்
உண்டு நல்வாழ்வே . . . . . (நல்ல)

Govt. Press, Madras.